# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 3.9.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்தை எதிர்க்க, உலக அளவில் விரிவான அணுகுமுறை தேவை என்பதை, இந்தியாவும் பெல்ஜியமும், கூட்டாக வலியுறுத்தி உள்ளன.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பெல்ஜியம் பிரதமரை சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இந்தியா, 7.8 சதவிகித வளர்ச்சியை எட்டியதில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி இருப்பதாக, மத்திய தொழில்-வணிக அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறி உள்ளார்.

நவீன தொழில் நுட்பங்களின் நிர்வாகத்திற்கான வாழும் ஆய்வகமாக புதுச்சேரியை மேம்படுத்த முடியும் என துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

## மோடி-பெல்ஜியம்

தீவிரவாதத்தை, எங்கும், எந்த வடிவிலும் சகித்துக் கொள்ள முடியாது என்பதையும், தீவிரவாதத்தை எதிர்க்க, உலக அளவில் விரிவான அணுகுமுறை தேவை என்பதையும், இந்தியாவும் பெல்ஜியமும், கூட்டாக வலியுறுத்தி உள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பெல்ஜியம் பிரதமர் திரு பார்ட்-டி-வேவருடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து, இருதலைவர்களும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது. தீவிரவாதிகளுக்கு ஆதரவான, நிதி, ஆள்பிடிப்பு, மற்றும், புகலிட கட்டமைப்பை முற்றிலுமாக கலைப்பதில், உலக சமுதாயம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான தடை மூலம் தீவிரவாதத்தை எதிர்ப்பதில் உலக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இருதலைவர்களும் அழைப்பு

விடுத்தனர். மேற்காசிய நிலவரம் உட்பட சர்வதேச பிணக்குகளுக்கு, பேச்சு வார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம், நிரந்தர தீர்வு காண, இருநாடுகளும் முழு ஆதரவளிக்கும் என்பதையும், இருதலைவர்களும் மீண்டும் உறுதிப்படுத்தினர். ஐ நா சாசனத்தை மையமாகக் கொண்டு, உலக அளவிலான பலதரப்பு கட்டமைப்பில், திறம்பட்ட சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்றும், கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டது.

## மோடி-பெல்ஜியம்

இந்தியா-பெல்ஜியம் பிரதமர்களின் சந்திப்பைத் தொடர்ந்து இன்று இரு நாடுகளுக்கும் இடையே, புதுப்பிக்க வல்ல எரிசக்தி, சைபர் குற்றங்கள், மற்றும், ராஜீயத் துறைப் பயிற்சி தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. பாதுகாப்பு துறையில் ஒத்துழைக்கும் உத்தேசம் குறித்து, பூர்வாங்க ஆவணம் ஒன்றும் இறுதி செய்யப்பட்டது.

இதுகுறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிக்கையில், கொந்தளிப்பான உலகச் சூழல் காரணமாக, உணவு, எரிபொருள், மற்றும் பொருள் விநியோக சங்கிலிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் வளர்ச்சி தான், புதிய வாய்ப்புகளுக்கான உலகின் நம்பிக்கை ஒளியாகத் திகழ்வதாக கூறினார். இது குறித்து கூடுதல் விவரங்கள்...........

(வாய்ஸ்)

## மோடி-பெல்ஜியம்

(வாய்ஸ்)

முதல் உலகப் போரின் போது, பெல்ஜியத்தில் ஆயிரக் கணக்கிலான இந்திய ஜவான்கள், துணிச்சலுடன் போரிட்டு உயிர் தியாகம் செய்ததை, இருநாடுகளும், எப்போதும் நினைவில் கொண்டுள்ளதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். பொதுவான ஜனநாயக மாண்புகள், சந்தைப் பொருளாதாரம், மற்றும் மக்கள் நிலையிலான தொடர்புகளால், இருநாடுகளும், இயற்கையான கூட்டாளிகளாகவே திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

10 ஆண்டுகளுக்கு முன்னர் தாம் பெல்ஜியம் சென்றதைத் தொடர்ந்து, இருதரப்பு உறவுகளில் கணிசமான முன்னேற்றம் எட்டப் பட்டுள்ளது

குறித்து, பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டார். இந்தியாவும்-பெல்ஜியமும் இணைந்து ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில், உலகின் மிகப் பெரிய பசுமை அம்மோனியா ஆலை ஒன்றை நிறுவி வருவதை, அவர் சுட்டிக் காட்டினார். செமி கண்டக்டர் துறையில், பெல்ஜியத்தின் நிபுணத் துவமும், இந்தியாவின் பெருமளவு சந்தை வாய்ப்புகளும் இணைந்து, அற்புதங்களைப் படைக்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி மேலும் குறிப்பிட்டார்.

## பெல்ஜியம்-ராஜ்நாத்

3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பெல்ஜியம் பிரதமர் திரு பார்ட்-டி- வேவர், இன்று காலை, புதுடெல்லி ராஜ்காட்டில் உள்ள காந்தி சமாதியில் மலர், அஞ்சலி செலுத்தினார். அவருடன் சேர்ந்து இந்தியா வந்துள்ள பெல்ஜியம் பாதுகாப்பு அமைச்சர் திரு தியோ ஃபிராங்க்கென்-னை, புதுடெல்லியில், பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், சந்தித்துப் பேசினார். பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பது குறித்த பேச்சு வார்த்தைகள் மற்றும் உயர்நிலைப் பயணங்கள் மூலம், இருதரப்பு உறவுகளை விஸ்தரித்துக் கொள்ள, இரு அமைச்சர்களும் ஒப்புக் கொண்டனர். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பில் பரஸ்பர ஒத்துழைப்பிற்கு அவசியம் இருப்பதையும் இவர்கள் ஒப்புக் கொண்டனர்.

## ராஜ்நாத்

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில் பாதுகாப்பு சார்ந்த ராஜீயத் துறை செயல்பாடுகள் குறித்த ரக் ஷா ஆவணத்தை வெளியிட்டார். அடுத்த 10 ஆண்டுகளில், உலக நாடுகளுடன் இந்தியா எட்ட வேண்டிய பாதுகாப்பு கூட்டாண்மை உடன்பாடுகள் குறித்த விரிவான செயல்திட்டமாக இந்த ஆவணம் அமைந்துள்ளது. பாதுகாப்பு சார்ந்த இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பின் வலுவாக்கம், கூட்டு ராணுவ பயிற்சிகள் மூலமான பாதுகாப்புத் திறன் மேம்பாடு, நட்பு நாடுகளுடன், சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளின் பரஸ்பர பகிர்வு, பாதுகாப்பு உற்பத்தி துறையின் ஏற்றுமதிப் பெருக்கம் ஆகிய 4 முக்கிய அம்சங்கள் இந்த ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு சார்ந்த இந்தியாவின் ராஜீயத்துறை முயற்சிகள் நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் முக்கிய அங்கமாக திகழ்வதும் குறிப்பிடத் தக்கது.

## மோடி-வெள்ளம்

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று தமது வாரணாசியின் மக்களவைத் தொகுதியின் வெள்ள நிலவரங்கள் குறித்து, மறு ஆய்வு மேற்கொண்டார். வாரணாசி மாவட்டக் குற்றவியல் நீதிபதியை, அவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வெள்ள நிலவரம் மற்றும் நிவாரண ஏற்பாடுகள் குறித்து விவரங்களை கேட்டறிந்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை உடனுக்குடன் கிடைப்பதை உறுதிப் படுத்தும் வகையில், நிவாரணப் பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும், நிவாரண முகாம்களில், குழந்தைகள், பெண்கள் மற்றும் வயதானவர்களின் சிறப்பு தேவைகளுக்கு முக்கியத் துவம் அளிக்கவும் பிரதமர் வலியுறுத்தினார். இதற்கிடையே உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், ஃபரூக்காபாத் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று வான்வழியே பார்வையிட்டார். உதவி-மீட்பு பணிகளையும் அவர் நேரடியாக மறுஆய்வு செய்தார். உத்தரபிரதேசத்தில் மழை-வெள்ளம் காரணமாக 32 மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மாநில அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கோயல்

நடப்பு நிதியாண்டில் இந்தியா 7.8 சதவிகித வளர்ச்சியை எட்டியதில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி இருப்பதாக மத்திய தொழில்-வணிக அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறி உள்ளார். பல்வேறு நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தங்களை நன்கு பயன்படுத்திக் கொள்வது குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, தொழில் துறையினருக்கான தேசிய பயிலரங்கில் அவர் உரையாற்றினார். உலகச் சந்தையில் முக்கிய பங்களிக்கும் பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா மேம்பட வலுவான பாதை ஒன்றை வகுத்துக் கொடுக்கும் வகையில் இந்த வரியில்லா வர்த்தக உடன்பாடுகள் அமைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். அரசுக்கும், பல்வேறு துறைகள் தொடர்பான ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்புகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

## புதுச்சேரி மாநாடு

புதுச்சேரியில் ஐசிடி அகாடமி சார்பில் இன்று நடைபெற்ற பிரிட்ஜ்-26 என்னும் 72-ஆவது மாநாட்டை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார். செயற்கை நுண்ணறிவு, கல்வி, மற்றும், பொருளாதார தலைமை என்ற கருப்பொருள் அடிப்படையில் நடைபெற்ற இம்மாநாட்டில், பொறியியல் மாணவர்கள், பேராசிரியர்கள், மற்றும் ஏஐ வல்லுனர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டில் துணை நிலை ஆளுநர் ஆற்றிய உரை குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

## புதுச்சேரி மாநாடு

(வாய்ஸ்)

செயற்கை நுண்ணறிவு, ரோபாட்டிக்ஸ், குவாண்டம், மற்றும், பசுமை தொழில்நுட்பங்கள், நாட்டின் எதிர்காலத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை பெற்றவை என்றும், உயர்கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ள புதுச்சேரியை, இத்தகைய தொழில் நுட்பங்களின் நிர்வாகத்திற்கான, வாழும் ஆய்வகமாக மேம்படுத்த முடியும் என்றும், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், தமது உரையில் கூறினார். தகவல் அளிப்பது மட்டுமே கல்வியின் நோக்கமல்ல என்றும், சிந்திக்கும் திறன், படைப்பாற்றல், மற்றும், பொறுப்புணர்வை மாணவர்களுக்கு வழங்குவதே, எதிர்காலக் கல்வியாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். பல்கலைக் கழகங்கள், பாடத் திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில், தொழில் துறையுடன் இணைந்து செயல்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார். புதுச்சேரியில், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதற்கான வாய்ப்புக்களை, இம்மாநாடு ஆராய வேண்டும் என்றும், துணை நிலை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

## காரைக்கால்

காரைக்கால் டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தில், நடப்பு கல்வியாண்டிற்கான, முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக் கலந்தாய்வு, வரும் 8-9 ஆகிய தேதிகளில் நடைபெற

உள்ளது. 8-ஆம் தேதி செவ்வாய்கிழமை, வணிகவியல், தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம் மற்றும் வேதியியல் பிரிவுகளுக்கான கலந்தாய்வும், மறுநாள் புதன்கிழமை, கணிப்பொறி அறிவியல், இயற்பியல், தாவரவியல், விலங்கியல, கணிதம் உள்ளிட்ட பாடப் பிரிவுகளுக்கான கலந்தாய்வும், தரவரிசைப் பட்டியல் அடிப்படையில் நடைபெறும். இதற்கு அழைக்கப்பட்டுள்ள மாணவ- மாணவிகள், தங்களின் பெற்றோர்களுடன், அனைத்து அசல் சான்றிதழ்கள், மற்றும் சேர்க்கைக் கட்டணத்தை எடுத்து வந்து கலந்தாய்வில் பங்கேற்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வானிலை

இன்று, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும், இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதரப் பகுதிகள் மற்றும் காரைக்கால் பகுதியில், லேசான மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 9-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இன்று, சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் வங்க கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, மதுரை மாவட்டம் திருவாதவூர் உள்ளிட்ட இடங்களில் 5 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## நீதிமன்றம்-வழக்கறிஞர்

சட்ட கல்லூரி மாணவர்கள் தவறு செய்தால் அந்தந்த கல்லூரி நிர்வாகத்தினர் தங்களின் விதிமுறைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாமே தவிர, சட்டக் கல்லூரி மாணவர்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம், இந்திய வழக்கறிஞர் சங்கத்திற்கு இல்லை என உச்சநீதிமன்றம் கூறி உள்ளது. ஐதராபாத் நால்சர் சட்டப் பல்கலைக் கழக மாணவர்கள் மீது இந்திய வழக்கறிஞர் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான சர்ச்சைக் குறித்த விசாரணைகளின் போது தலைமை நீதிபதி திரு சூர்யகாந்த் நீதிபதிகள் திரு ஜோய் மால்யா, திருமதி வி மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று இவ்வாறு

உத்தரவிட்டது. சட்டக் கல்லூரி மாணவர்கள் படிப்பு முடித்து வழக்கறிஞர் சங்கத்தில் பதிவு பெற்ற பின்னர் தான், அவர்களின் செயல்பாடுகளை சங்கம் கட்டுப்படுத்த முடியும் என்று நீதிபதிகள் கூறினர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்தை எதிர்க்க, உலக அளவில் விரிவான அணுகுமுறை தேவை என்பதை, இந்தியாவும் பெல்ஜியமும், கூட்டாக வலியுறுத்தி உள்ளன.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பெல்ஜியம் பிரதமரை சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இந்தியா, 7.8 சதவிகித வளர்ச்சியை எட்டியதில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி இருப்பதாக, மத்திய தொழில்-வணிக அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறி உள்ளார்.

நவீன தொழில் நுட்பங்களின் நிர்வாகத்திற்கான வாழும் ஆய்வகமாக புதுச்சேரியை மேம்படுத்த முடியும் என துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------------